**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG20 – நிலை II – (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)
**ஜனவரி–பிப்ரவரி 2021**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10 x 1 = 10)**

1. பாவேந்தர் எவ்வாறு அழைக்கப் பெற்றார்?
2. பெண்ணுக்கு ஞானத்தை வைத்தவன் யார்?
3. மின்னல் போன்ற தோற்றமுடையவள் யார்?
4. தக்கயாகப் பரணியை இயற்றியவர் யார்?
5. திருவள்ளுவருக்கு வேறு பெயர் என்ன?
6. திரு.வி.க. என்பதை விரித்து எழுதுக.
7. பரமார்த்த குரு கதைகள் எழுதியவர் யார்?
8. இந்திய நாட்டுக் கொடியின் மையத்தில் உள்ள நிறம் என்ன?
9. சித்தன்னவாசலில் உள்ள ஓவியங்களில் பெரியது எது?
10. பகுபதத்தின் முதல் உறுப்பு எது?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. வியங்கோள் வினைமுற்று எந்தெந்தப் பொருள்களில் வரும்?
2. வழு–வழாநிலை என்றால் என்ன?
3. இனமொழி விடை என்றால் என்ன?
4. பாரதியார் பணியாற்றிய இதழ்கள் யாவை?
5. குற்றாலத்தில் வாழ்கின்ற மக்கள் எதனைத் தேடுகின்றனர்?
6. தாரகாசூரனின் மூன்று புதல்வர்கள் யாவர்?
7. திருமால், யாராகப் பிறந்தான் என்று புலவர் கூறியுள்ளார்?
8. பாரதிதாசன் படைத்த நூல்கள் சிலவற்றைக் கூறுக.
9. உலகச் சமயங்கள் மூன்றனை எழுதுக.
10. பெரியார் ஏன் ஈரோட்டை விட்டு இடம் பெயர்ந்தார்?
11. மன்னன் சிரிக்கின்றபோது எப்படி இருக்கும்?
12. அரசர் ஓவியத்தின் சிறப்பு என்ன?

13. பாரியும் கபிலரும் கலை விழா காண எங்குச் சென்றனர்?
14. இயேசுநாதர் வாழ்வைப் பார்த்து ஒருவன் எவ்வாறு வாழ வேண்டும்?
15. முகமது நபியின் முக்கிய நெறி யாது?

## பகுதி – இ

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. பெரும்பொழுதுகள் ஆறினை எழுதுக.
2. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
3. தேசியக் கொடியில் காணப்படும் மூன்று வண்ணங்கள் யாவை? வண்ணங்கள் உணர்த்தும் செய்தி யாது?
4. பருத்திப் பூவே சிறந்தது என்று அமைச்சர் நலம் விரும்பி கூறியதற்குரிய காரணம் என்ன?
5. வைக்கம் போராட்டம் குறித்து எழுதுக.
6. குலசேகராழ்வார் குறிப்பு வரைக.
7. திருநாவுக்கரசர் குறிப்பு வரைக.
8. கம்பர்–குறிப்பு வரைக.

## பகுதி – ஈ

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**

Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. பகுபத உறுப்புகளையும் அதன் விளக்கம் மற்றும் எடுத்துக்காட்டுகள் கொண்டு விளக்குக.
2. சீறாப்புராணம் குறிப்பு வரைக. இறைத்தூதரான நபிகள் நாயகத்தை திரு.வி.க. போற்றிப் புகழ்வதை எழுதுக.
3. சித்தன்ன வாசல் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

## பகுதி – உ

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**

Write an essay in three pages to any one of the questions. **(1x15=15)**

1. குறுக்கம் வகைகள் யாவை? அவற்றில் ஏதேனும் நான்கினுக்கு எடுத்துக்காட்டி கூறி விளக்குக.
2. உவமைக்கவிஞர் சுரதா பற்றி குறிப்பு எழுதி, அவர் கூறிய இன்பம் எனும் பாடலின் கருத்தைத் தொகுத்து எழுதுக.

***********